**Publication: Dinamani** **Date: Wednesday, 13th January, 2016**

**Edition: Chennai**

# இந்தியாஃபர்ஸ்ட் ஆயுள் காப்பீட்டு நிறுவனம்: புதிய ஓய்வூதிய திட்டம் அறிமுகம்

**புது தில்லி, ஜன. 12:** தனியார் துறையைச் சேர்ந்த இந்தியாஃபர்ஸ்ட் ஆயுள் காப்பீட்டு நிறுவனம் புதிய ஓய்வூதிய திட்டத்தை அறிமுகப் படுத்தியது.

இதுகுறித்து அந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி ஆர்.எம். விசாகா கூறியதாவது:

பணி ஓய்வுக்குப் பிறகான வாழ்க்கையை முறையாகத் திட்டமிடும் வாடிக்கையாளர்களுக்கு இந்த உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பாதுகாப்பான நீண்டகால அடிப்படையிலான இந்த ஓய்வூதிய திட்டத்தில் தொடக்க ஆண்டுகளில் செலுத்தப்படும் மொத்த பிரீமிய தொகைக்கு உறுதியளிக்கப்பட்ட 9 சதவீதம் வட்டி கிடைக்கும்.

அதற்குப் பிறகான ஆண்டுகளில் நிறுவனம் ஈட்டும் லாபத்தின் பலன்களையும் வாடிக்கையாளர்கள் பெறலாம். வாடிக்கையாளர்களின் வசதிக்கேற்ப பிரீமியம் தொகையை ஒரே முறையோ அல்லது 5 முதல் 10 ஆண்டு கால திட்டத்திலோ செலுத்தலாம்.

பாலிசிதாரர் விருப்பத்திற்கேற்ப 40 முதல் 80 வயதுக்கு இடையிலான காலத்தில் ஓய்வூதிய திட்டப் பலன்களைப் பெறலாம்.

இந்த ஓய்வூதிய திட்டத்தில் செலுத்தும் பிரீமியம் தொகைக்கு வருமான வரி விலக்கு சலுகைகளையும் பெறலாம் என அவர் தெரிவித்தார். பரோடா வங்கி, ஆந்திரா வங்கி, பிரிட்டனின் லீகல்&ஜெனரல் நிதி நிறுவனம் கூட்டாக உருவாக்கியது இந்தியாஃபர்ஸ்ட் ஆயுள் காப்பீட்டு நிறுவனம்.